

நெல்லையில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு,உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் ஆகியோர் திருநெல்வேலி மேற்கு புறவழிச் சாலை திட்டப் பணிகளை கொங்கன்தான் பாறை விலக்கு பகுதியில் சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சியர் மரு.இரா சுகுமார் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் அப்துல் வஹாப் எம். எல்.ஏ.மாநகராட்சி ஆணையர் மோனிகா ராமன் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன் மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர் செல்வசூடாமணி உள்பட பலர் உள்ளனர்.



தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் நடைபெற்ற ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை முகாமின் செயலி விளக்க கூட்டத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன் கலந்துகொண்டு உரையாற்றினார். உடன் கோவில்பட்டி நகர் மன்ற தலைவர் கருணாநிதி, ஒன்றிய செயலாளர்கள் முருகேசன், ராதாகிருஷ்ணன், கயத்தார் கருப்பசாமி, பொதுக்குழு உறுப்பினர் ரமேஷ், நகர் மன்ற உறுப்பினர்கள் கு.தவமணி, சுரேஷ் கிழக்கு நகரச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ராதாகிருஷ்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



மதுரை மாவட்டம், விளாங்குடியில் ரூபாய் 29.8 கோடி மதிப்பீட்டில் விளாங்குடி புதிய சார்பதிவாளர் அலுவலக கட்டட கட்டுமான பணிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பணிகளை தொடங்கி வைத்தார். உடன் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் பிரவீன்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் தன செல்வம், மாநில இளைஞரணி துணை செயலாளர் ஜி.பி. ராஜா, பகுதி செயலாளர்கள் சசிக்குமார், மதி வெங்கடேஷ், மாவட்ட துணை செயலாளர் ரோகிணி பொம்மதேவன், மாமன்ற உறுப்பினர் அமுதா முத்துப்பேற்கினியின், மாவட்ட அணி அமைப்பாளர்கள் வீரராகவன், மீரா ஜான் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் அதிகாரிகள், பொதுமக்கள் பங்கேற்றனர்.



இராமநதபுரம் மாவட்டம், குந்துக்கால் பகுதியில் 05.07.2025 அன்று வனம் மற்றும் கிராமத் தொழில் வாரிய துறை அமைச்சர் ஆர். எஸ்.ராஜகண்ணப்பன்,மற்றும் மாவட்டக் கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம் எல் ஏ,இருவரும் வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள சுற்றுலா தலங்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் பயன்படுத்தும் படகு இல்லத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரஜித் சிங் காலோன், மாவட்ட வன உயிரின காப்பாளர் முருகன், மாவட்ட வன அலுவலர் ஹேமாலதா ஆகியோர் உள்ளனர்.

### நெல்லையில் – 194 வேலைவாய்ப்பு நிறுவனங்கள் மூலம்

# 5300 வேலை நாடுனர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு – அமைச்சர்கள் கே.என்.நேரு – கோவி.செழியன் வழங்கினர்!

நெல்லை, ஜுலை 8 -

நெல்லை மாவட்டம் வண்ணார்பேட்டை பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியில் மாவட்ட நிர்வாகம், அண்ணா பல்கலைக்கழகம், கிவ்லைப் அறக்கட்டளை, தி ரைஸ், அனைத்துலக தமிழ் எழுமின் தொழிலதிபர்கள் கூட்டமைப்பு இணைந்து 05.07.2025 அன்று நடைபெற்ற தனியார் வேலை வாய்ப்பு முகாமில் சட்டப் பேரவை தலைவர் மு. அப்பாவு,நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே. என்.நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன் ஆகியோர் பங்கேற்று

திராவிட மாடல் ஆட்சியில் 194 வேலை வாய்ப்பு நிறுவனங்கள் மூலம் 5300 வேலை நாடுனர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கியதை நினைத்து மகிழ்ச்சி அடைகிறோம் என்று ஒட்டுமொத்த கருத்துடன் தெரிவித்தனர்.

நெல்லை மாவட்டம் வண்ணார்பேட்டை பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற மாபெரும் தனியார் வேலை வாய்ப்பு முகாம் 194 தனியார் வேலை வாய்ப்பு நிறுவனங் களுடன் நான் முதல்வன் திட்டம் உள்ளிட்டவை இணைந்து 15000 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்ட மாபெரும் வேலை வாய்ப்பு முகாம் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே. என்.நேரு,உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர்.கோவி. செழியன் ஆகியோர் பங்கேற்று மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார்,நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ.மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், ஆணையாளர் மரு. மோனிகா ராணா, துணை மேயர் ராஜ், முன்னாள் அமைச்சர்கள் மைதீன் கான் பூங்கோதை ஆலடி அருணா, அனைத்துலக தமிழ் எழுமின் நிறுவனர் ஜெகத் கஸ்பர் ஆகியோர் முன்னிலையில் 5300 வேலை நாடுனர்களுக்கு தனியார் வேலை வாய்ப்பு பணி நியமன ஆணையினை வழங்கினர்.

நிகழ்வில் சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு பேசியதாவது.

முதலமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்ற பின்னர் ஒருபுறம் பல்வேறு தொழிற் சாலைகளில் முறையான பணியாளர்கள் கிடைக்கவில்லை என்றும் மற்றொரு புறம் படித்த இளைஞர்களுக்கு சரியான வேலை இல்லை என்பதை நிவர்த்தி செய்வதற்காக தமிழ்நாடு அரசின் சார்பில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் 100 வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளது. நெல்லை மாவட்டத்தில் இதுவரை 12க்கும் மேற்பட்ட மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது.10 ஆண்டுகளுக்கு முன்பாக நெல்லை மாவட்டத்தில் தமிழ்நாட்டிலே முதன்முறையாக தனியார் வேலை வாய்ப்பு முகாமினை தூத்துக்குடியில் நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள், எழுமின் நிறுவனர் ஜெகத் கஸ்பர் ஆகியோர் நடத்தி பெருமை சேர்த்தனர்.

முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற நான்கு ஆண்டுகளில் தமிழ்நாட்டில் 32 துளிர் பூங்காக்கள் 22 தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டுள்ளது 17.95 லட்சம் புதிய சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளது அதனை அடிப்படையில் சுமார் 2.60 கோடி பேருக்கு வேலை வாய்ப்புகள் வழங்கப் பட்டுள்ளது நெல்லை மாவட்டத்தில் குரூப் 4 பிரிவில் 246 நபர்கள் தேர்வு செய்யப் பட்டுள்ளனர்.அவர்களில் 20 நபர்கள் தமிழ்நாடு அரசின் நான் முதல்வன் திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்று தேர்வு பெற்றுள்ளனர்.இதை சொல்லும் போது மிகவும் பெருமையாக உள்ளது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் பெண்கள் அதிகமானோர் கல்வி பயின்று வருகின்றனர். 41 சதவீதம் பெண்கள் வேலைவாய்ப்பினை பெற்றுள்ளனர். முதலமைச்சர் அவர்கள் மாணவர்கள் படிக்கும் காலத்தில் நான் முதல்வன் திட்டத்தின் மூலம் பயிற்சி கொடுத்து வேலை கிடைப்பதை உறுதி செய்துள்ளார்கள்.முதலமைச்சர் அவர்கள் படிப்பையும் கொடுத்து வேலை வாய்ப்பும் உருவாக்கியுள்ளார்கள். இது இரண்டும் இணைக்கும் பாலமாக அமைந்துள்ளது. உங்கள் சார்பாக முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பேரவை தலைவர் மு.அப்பாவு பேசினார்.

பின்னர் அமைச்சர் கோவி. செழியன் பேசியதாவது.

நெல்லையில் 15,000,ம் மேற்போட்டோர் கலந்து கொள்ளும் வகையில் வேலைவாய்ப்பு முகாம் நடக்கிறது.இதில் 194 நிறுவனங்கள் கலந்து கொண்டுள் ளது.பெருமையாக உள்ளது.அமைச்சர் அண்ணன் கே.என்.நேரு அவர்கள் திருச்சி மாவட்டத்தை போன்று நெல்லை மாவட்டத்தையும் உருவாக்க வேண்டும் என்று செயல்பட்டு வருகிறார்.இது வேலை வாய்ப்பு திருவிழாவாக கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். இதில் சுமார் 15000 க்கும் மேற்பட்டோர். முன்பதிவு செய்துள்ளனர்.இன்று 13,000 வேலைநாடுனர்கள் கலந்து கொண்டனர். இதில் 5300 வேலை நாடுனர்களுக்கு பணி நியமண ஆணை வழங்கியதில் மகிழ்ச்சி அடைகிறேன். உயர்கல்வி படித்து ஒவ்வொரு ஆண்டும் லட்ச கணக்கில் பட்டாதாரிகள் உருவாகின்றனர்.தமிழ்நாடு உயர்கல்வி யில் உயர்வு பெற்று நாட்டில் முதலிடத்தில் இருக்க தமிழகத்தில் செயல்படுத்தப் படும் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களின் நான் முதல்வன் திட்டம், தமிழ்ப் புதல்வன், புதுமைப்பெண் திட்டம்,7.5 சதவீதம் இட ஒதுக்கீடு போன்றவைகள் தான் காரணம்.கல்லூரியில் படிக்கும் 1000 பேரில் 800 பேருக்கு எதாவது ஒரு திட்டத்தில் நிதி உதவியை அரசு தந்து ஏழை மாணவர்களை பட்டாதாரியாக்கும் செயலையும் அரசு செய்து வருகிறது. ஏழை, எளிய, மாணவர்கள் என அனைவரும் 100 சதவீதம் உயர் கல்வி பயில வேண்டும் என்ற உன்னத எண்ணத்தில் முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள்.

முதலமைச்சர் அவர்கள்,துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்,ஆகியோர்களின் சீரிய முயற்சியால் உருவாக்கப் பட்ட நான் முதல்வன் திட்டத்தின் மூலம் லட்சக் கணக்கானோர் ஆண்டு தோறும் பட்டாதாரியாகி கல்வி பயின்று வருகின்றனர்.


இவ்வாறு அமைச்சர் முனைவர்.கோவி. செழியன் பேசினார்.

அதன் பின்னர் அமைச்சர் கே.என்.நேரு பேசியதாவது . நெல்லையில் தனியார் நிறுவனத்தின் மூலம் நடத்தப்படும் இந்த வேலைவாய்ப்பு முகாமில் நான் முதல்வன் திட்டம் மூலம் அரசு இந்த நிகழ்வில் பங்கெடுத்து பல்வேறு நபர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்க உதவி வருகிறது. அரசு எடுத்த முயற்சியால் நெல்லையில் டாடா சோலார் பவர் நிறுவனம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.அதன்படி கங்கை கொண்டான் பகுதியில் நிறுவனம் கட்டிமுடிக்கப்பட்டு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. தற்போது கங்கைகொண்டான் சோலார் நிறுவனத்தில் 4000 பேர் பணிபுரிந்து வருகின்றனர். இதனை தொடர்ந்து நாங்குநேரி மற்றும் மூலைகரைப்பட்டி பகுதியில் சிப்காட் நிறுவனம் அமைத்து திருநெல்வேலியில் தொழில் வளத்தை பெருக்குவதற்காக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் நெல்லை மாவட்டத்தில் மேற்கு புறவழிச் சாலை பணிகள் நடைபெற்று வருகிறது.அந்த சாலை பணி முடிந்தவுடன் பல புதிய தொழிற் சாலைகள் தொடங்குவதற்கான வாய்ப்பு உருவாகி இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு கிடைக்கும்.டிசம்பர் மாதத்திற்குள் மேற்கு புறவழி சாலை அமைக்கும் பணி முடிவடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். சாலை உருவானால் தொழில் சாலை வரும் வேலைவாய்ப்புகள் பெருகும். முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களால் கொண்டு வரப்பட்ட நாங்குனேரி தொழிலில் நுட்ப பூங்கா பல இடையூறுகளால் தொய்வடைந்தது. முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால் தற்போது மீண்டும் அதனை செயல்படுத்த அரசாணை பிறப்பிக் கப்பட்டுள்ளது. கல்வி என்பது ஒருவரது வாழ்க்கையில் ஒளியேற்றும். அதன்பிறகு வேலை கிடைப்பது என்பது வாழ்வின் அடித்தளத்தை உருவாக்கும் அந்த பணியை முதலமைச்சர் அவர்கள் செய்து வருகிறார்கள். அதற்கு உறுதுணையாக பல்வேறு தனியார் நிறுவனங்களும் இருந்து வருகிறது.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பேசினார்.

நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் சரவணன், பிரான்சிப் சேவியர் பொறியியல் கல்லூரி நிறுவனர் கில்ட்டஸ்பாபு, முதல்வர் வேல்முருகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆ.பிரபாகரன், சித்திக், மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த்,பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ அய்யப்பன், ஒன்றிய செயலாளர்கள் கண்ணன்,ஜோசப்பெல்சிராஜன்,மாவட்ட அணி அமைப்பாளர்கள் இளைஞரணி ஜான்ரபீந்தர்,மாணவரணி அலெக்ஸ் அப்பாவு, வழக்கறிஞரணி செல்வ சூடாமணி,தகவல் தொழில்நுட்ப அணி பிரேம் ஆனந்த் உள்பட கழக நிர்வாகிகள், மாணவ, மாணவியர்கள்,

பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் , முதலமைச்சர் மு. க.ஸ்டாலின், அவர்களின் ஆணைக்கிணங்க முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ இயக்க செயல்பாட்டை தமிழ்நாடு வனம் மற்றும் கதர் கிராம தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் தொடங்கினார். அவ்வகையில் முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதி உட்பட்ட முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியம், முதுகுளத்தூர் கிழக்கு ஒன்றியம், மகிண்டி ஊராட்சி, உடை குளம் கிராமத்தில் இல்லம் தோறும் சென்று உறுப்பினர் சேர்க்கையை மேற்கொண்டார். உடன் முதுகுளத்தூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் பூபதி மணி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின், அவர்களின் ஆணைக்கிணங்க ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற சிறப்பு திட்டத்தின் மூலம் பரமக்குடி சட்டமன்றத் தொகுதி பரமக்குடி கிழக்கு ஒன்றியம் பாம்பூர் சமத்துவபுரத்தில் புதிய உறுப்பினர் சேர்க்கை முகாமினை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் துவக்கி வைத்தார் உடன் கிழக்கு ஒன்றிய செயலாளர் ஜெயக்குமார், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அந்தோணி தாஸ், மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் லாரன்ஸ், சமூக வலைதள பொறுப்பாளர் கோபு உட்பட கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்



தி.மு.க. தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புகிணங்க மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஓர் அணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கும் பணியினை மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் பெ. குழந்தை வேலு ஆகியோர் வீடு வீடாகச் சென்று மக்களிடம் புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் பணியினை நான்காண்டு சாதனைகளை எடுத்துரைத்து உறுப்பினர்களைச் சேர்த்தனர். உடன் கழக நிர்வாகிகள் சரவண பாண்டியன், முத்து கணேஷ், காமராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.